நியாயமாக விசாரிக்கவில்லை, விசாரனை நடத்கவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, இந்த அளவுக்கு இந்த மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு ஆகியவை கெட்டுவிட்டது. இந்த மாநிலத்தில் உயிருக்கும். உடமைக்கும் ஒருவருக்கு பாதுகாப்பு இல்லை. அதிலும் குறிப்பாக அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு இல்லை. ஆக, இந்த மாநில அரசினிடம் அரசியல் சட்ட அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்த பெரிய கடமைகள், பெரிய பொறுப்புகள் ஆகியவைகளை இந்த மாநில அரசு நிறைவேற்றத்தவறிவிட்டது. ஆகவே, இந்த மாநில அரசு ஆளத் தகுதியற்றுவிட்டது, அந்த உரிமையை இந்த மாநில அரசு இழந்துவிட்டது என்று கூறி, இந்த அரசின் மீது நான் கொண்டு வந்த தீர்மானத்தை வலியுறுத்தி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.23 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(7) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்,

95. திருத்தணி— திருப்பதி சாலைகள் சந்திப்பில் சோதனைச் சாவடி ஒன்றை அமைப்பது குறித்து 13-12-1978-ம் தேதியிடப் பெற்ற வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 1534—ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

* 30. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1979).

* 31. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்த சட்ட முன்வடிவிற்கான இணைப்பு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்2/1979).

* 32. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1979).

* 33. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன் வடிவிற்கான இணைப்பு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1979).

---

* 16-2-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.